| S–2606 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**First Semester**

**Tamil**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. பாரதிதாசனின் உள்ளம் துள்ளும் நாள்! உள்ளம் சொக்கும் நாள்! எந்நாளோ? கூறுக.

2. விரக்தியின் முடிச்சுகளை வெட்டியெறிந்தால் கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை? மு. மேத்தா கவிதை வழி எழுதுக.

3. பிரமநாயகம் என்ன வேலை பார்க்கிறார்? அவருக்குக் கிடைக்கும் சம்பளம் எவ்வளவு? புதுமைப்பித்தன் சிறுகதை கொண்டு எழுதுக.

4. சு.தமிழ்ச் செல்வனின் சிறுகதைத் தலைப்பையும் கதைக் கருவையும் எழுதுக.

5. சு.தமிழ்ச் செல்வியின் புதினம் எந்த வட்டாரத்து மக்களின் பேச்சு வழக்கினைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது?

6. அளம் புதினத்தில் இடம்பெற்ற ‘கல்லாகொளம்’ என்ற குளம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது? கூறுக.

7. திவ்யா தன்னுடைய திருமணத்தைத் தள்ளிப் போடக் காரணம் என்ன? கூறுக.

8. திவ்யா பெண் கேட்டு வந்த தம்பதியர்களின் பெயர்களை எழுதுக.

9. அமெரிக்காவின் பூர்வகுடிமகளுக்கு உரிய பெயர் என்ன? அதன் காரணம் யாது? கூறு.

10. ஜெர்மனியில் உள்ள ஒரு தமிழ்ப்புலவர் குறித்து எழுதுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கதிரவன் வருகை குறித்துப் பாடிய வாணிதாசன் கவிதைக் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதி கண்ட மானுடம் பற்றிய ஈரோடு தமிழன்பன் கவிதையினை விளக்குக.

12. (அ) கந்தர்வன் எழுதியுள்ள 'சாசனம்' என்ற சிறுகதை உணர்த்திய கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) பெண்களின் இயல்புகள் ஆண்களால் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன? கு.ப.ரா. சிறுகதை கொண்டு எழுதுக.

13. (அ) ஐப்பசி அடை மழையின் தாக்கத்தால் சுந்தராம்பாள் குடும்பம் எவ்வாறெல்லாம் சிரமப்பட்டதென்பதனை 'அளம்' புதினம் வழிநின்று எழுதுக.

(அல்லது)

(ஆ) தனக்கென்று ஒரு சொந்த அளம் வேண்டும் என்று முயற்சிக்கின்ற அம்மா-மகளின் உரையாடல்களை விளக்கமாகக் கூறுக.

14. (அ) திவ்யா-தினேஷ் காதல் வயப்பட்ட நிகழ்வுகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) திவ்யாவின் திருமணத்திற்காகத் துணை நின்ற மாந்தர்கள் பற்றி எழுதுக.

15. (அ) கவிஞர் நோகுச்சி குறித்து ஏ.கே.செட்டியார் தருகின்ற அனுபவ நிகழ்வுகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஜினிவா சர்வதேச சங்கம் குறித்த அனுபவங்களை உலகம் சுற்றும் தமிழன் எவ்வாறெல்லாம் விளக்குகின்றார்? கூறுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நா.காமராசனின் கவிதைகள் உணர்த்தும் உருவகங்களைத் தொகுத்தெழுதுக.

17. கோமதி என்ற கதை மாந்தர்களின் உணர்வுகளை கி.ராஜ நாராயணன் சிறுகதை கொண்டு எழுதுக.

18. அளம் புதினம் அறிந்துகொள்கின்ற நெய்தல் நிலச் செய்திகளை விவரிக்க.

19. அழுக்குப்படாத அழகு நாடகம் வெளிப்படுத்துகின்ற திவ்யா என்ற கதை மாந்தரின் பண்புநலன்களைக் கூறுக.

20. இந்தியாவைப் பற்றியும் காந்தியடிகள் குறித்தும் உலகத் தலைவர்கள் உரைக்கின்ற கருத்துக்களை எடுத்துரைக்க.

---

| S–2607 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2024

### First Semester

### Tamil

### தமிழக வரலாறும் பண்பாடும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் **ஓரிரு** சொல்/தொடரில் விடையளிக்க.

1. சிந்துவெளி இலிங்க வழிபாடு பற்றி எழுதுக.

2. 'பெருங்கற் புதைவுகள்' என்றால் என்ன?

3. தமிழகத்துடன் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்ட பிறநாட்டவர்கள் யாவர்? கூறுக.

4. சங்க காலத் தமிழகம் குறித்து அறிவதற்குப் பயன்பட்ட அகச் சான்றுகள் எவையெவை? கூறுக.

5. களவு, கற்பு, ஒழுக்கம் பற்றி எழுதுக.

6. பல்லவர் கால சித்தன்னவாசல் ஓவியம் பற்றிக் குறிப்பிடுக.

7. ரேனாண்டுச் சோழர்கள் என்போர் யார்?

8. இராசராச சோழனின் விருதுப் பெயர்கள் இரண்டினை எழுதுக.

9. பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடையாசிரியர்கள் இருவர் பெயர் கூறுக.

10. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தோற்றம், உறுப்பினர்கள் விபரம் பற்றிக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) பழைய கற்காலம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழரின் வரலாற்றுத் தொன்மையை எவ்வாறு கண்டறிவது?

12. (அ) சங்க காலத்துச் சேர மன்னர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்க கால ஐந்திணை குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

13. (அ) பல்லவர் கால ஆட்சி முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நரசிம்ம வர்ம பல்லவனின் சிற்பக் கலை குறித்து எழுதுக.

14. (அ) சோழர் காலக் கோயில் கலை வளர்ச்சியினை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ராச ராச சோழனின் வெற்றிச் சிறப்பினைக் கூறுக.

15. (அ) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உ.வே.சாவின் பங்களிப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக மாற்றம் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் **கட்டுரை** வடிவில் விடையளிக்க.

16. பண்டைத் தமிழர்கள் பிறநாட்டாருடன் மேற்கொண்டிருந்த பல்வகைத் தொடர்புகளைத் தொகுத்தெழுதுக.

17. மூவேந்தர்களின் வரலாற்றுச் செய்திகளை விவரிக்க.

18. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட பண்பாட்டு நிகழ்வுகளைப் பட்டியலிடுக.

19. நாயக்கர்களின் ஆட்சி முறை பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் திரட்டித் தருக.

20. தமிழர்களின் சமூக எழுச்சி 19-20 ஆம் நூற்றாண்டில் எவ்வாறு இருந்தன? என்பதனை விவரிக்க.

———————

| S–2608 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**தமிழ்**

**இயைபுப்பாடம் – தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு உரிய கடமைகள் யாவை?

2. மேலாண்மையில் சிறந்தோங்கத் தேவையான காரணங்களை உரைக்க.

3. இல்லத் தலைவருக்கு உரிய மேலாண்மைப் பண்புகள் எவையெவை?

4. மேலாண்மைக்கு உழைப்பு எங்ஙனம் தேவைப்படுகின்றது?

5. ஆளுமைத் திறன்களை எவ்வாறு கண்டறிவது?

6. ஆளுமைத் திறன்களின் வகைகளைக் கூறுக.

7. தலைமைப் பண்பு – விளக்கம் தருக.

8. காவியக் கதைமாந்தர் இருவரின் தலைமைப் பண்பைக் குறிப்பிடுக.

9. நிர்வாகச் செயல்திறன் எவ்வாறு அமைதல் நலம்? கூறுக.

10. நிர்வாக மேலாண்மையின் செயற்பாடுகள் சிலவற்றை எடுத்துரைக்க.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஒரு செயலின் வெற்றி என்பது மேலாண்மையில் எவ்வாறு வெளிப்படுகின்றது?

(அல்லது)

(ஆ) மேலாண்மையில் சிறந்தோங்கச் செய்ய வேண்டிய வழிமுறைகளை எடுத்துரைக்க.

12. (அ) மனித உறவுகளுக்குள்ளே போலித் தோற்றத்தால் உண்டாகும் விளைவுகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தன்முனைப்பினால் குடும்ப உறவுகளுக்குள்ளே கூஷற்படும் பாதிப்புகளை எழுதுக.

13. (அ) நினைத்ததைச் செய்து முடிக்கும் தலைமைப் பண்பின் சிறப்பிக்களை விளக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' தலைமைப் பண்புக்கு எவ்வாறெல்லாம் கை கொடுக்கின்றது?

14. (அ) அன்பினால் ஆட்கொள்ளும் ஆளுமைத் திறன் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) துணிவு என்னும் ஆளுமைத்திறன் பற்றி எழுதுக.

15. (அ) வேளாண்மையை நிர்வகிப்பது குறித்து அறிஞர்களின் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நாட்டை நிர்வகிக்கும் அரசின் அங்கங்களாகத் திகழ்பவனவற்றை பற்றி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் <u>கட்டுரை வடிவில்</u> விடையளிக்க.

16. ஒருங்கிணைவு என்பது மேலாண்மையின் வெற்றிக்கு எங்ஙனம் துணைபுரிகின்றது? கூறுக.

17. ஆண் பெண் உறவுகள் மேலாண்மையில் ஏற்படுகின்ற சிக்கல்களையும் பாதிப்புக்களையும் எடுத்துரைக்க.

18. இராமன் என்ற கதைமாந்தரின் ஆளுமைத் திறன்களைத் தொகுத்தெழுதுக.

19. இலக்கியங்கள் வழி அறியப்படுகின்ற தலைமைப் பண்புகளால் உணர்ந்து கொண்ட கருத்துக்களை எழுதுக.

20. நிர்வாக மேலாண்மையின் சாதக பாதகங்களை விளக்கமாக எழுதுக.

| S–2609 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024.**

**Tamil**

**இயைபுப்பாடம் – அண்ணாவியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. அண்ணாவின் தோற்றத்தை நாவலர் நெடுஞ்செழியன் எவ்வாறு காட்சிப்படுத்துகின்றார்?

2. அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்று நிகழ்ச்சிக்காட்டிய சாதனைகள் இரண்டைக் கூறுக.

3. செவ்வாழைக் கன்று குறித்து குப்பியிடம் செங்கோடன் கூறியது என்ன?

4. பார்வதி பி.ஏ புதினத்தின் மையக் குரத்தினை எழுதுக.

5. காசியிலிருந்து காகப்பட்டர் மராட்டிய தேசத்திற்கு வரவேண்டிய காரணம் என்ன? கூறுக.

6. புராணங்கள் எதற்காக எழுதப்பட்டன? அண்ணாவின் கட்டுரை வழி நின்று எழுதுக.

7. அண்ணா ஆற்றிய சொற்பொழிவுகள் இரண்டின் தலைப்பினைக் கூறுக.

8. ‘1967’ என்று எதனை மையப்படுத்தி அண்ணா சொற்பொழிவு ஆற்றியுள்ளார்? கூறுக.

9. அண்ணா காலத்தில் சமூக நிலை குறித்து எழுதுக.

10. தமிழ்மொழிப்பற்றால் அண்ணாவின் ஆட்சி மலர்ந்தது? கலாப்ரியா கூறும் காரணங்களை உரைக்க.

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அண்ணாவின் சுயமரியாதை இயக்கப் பணிகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) அண்ணாவின் இரண்டாண்டு ஆட்சியின் சாதனைகள் சிலவற்றை விளக்குக.

12. (அ) சமூக ஏற்றத்தாழ்வு செவ்வாழை சிறுகதையில் எவ்வாறு எடுத்தியம்பப்பட்டுள்ளது? விளக்குக.

(அல்லது)

(ஆ) பார்வதி பி.ஏ புதினத்தின் கதைக்கருவையும் கதைப் போக்கையும் எடுத்தியம்புக.

13. (அ) சிவாஜியின் முடிசூட்டலுக்கு உண்டான எதிர்ப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பொங்கல் விழா குறித்த அண்ணாவின் கட்டுரைச் செய்திகளைத் தருக.

14. (அ) அண்ணாவின் சொற்பொழிவுகள் ஏற்படுத்திய தாக்கங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 1967ஆம் ஆண்டு அண்ணாவின் அரசியல் நகர்வுகளுக்குத் துணைநின்ற ஆண்டாக எவ்வாறு திகழ்ந்தது? உரைக்க.

15. (அ) மக்களின் தேவைகளில் இருந்தே அண்ணாவின் சிந்தனை உதயமாகின்றது! அண்ணாவின் கட்டுரைகள் தரும் விளக்கங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மக்கள் ஆதரவைத் திரட்ட அண்ணா கையிலெடுத்த கட்டுரை எனும் ஆயுதம் குறித்து எழுதுக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. அறிஞர் அண்ணாவின் எழுத்துப் பணியினைத் தொகுத்து எழுதுக.

17. பார்வதி எனும் புதுமைப் பெண்ணின் செயல்பாடுகளை அண்ணாவின் புதினம் கொண்டு எழுதுக.

18. சிவாஜியின் வெற்றி அங்கீகரிக்கப்படாமைக்கு உரிய சமூகக் காரணிகளை விளக்கமாக எடுத்துரைக்க.

19. அண்ணாவின் சொற்பொழிவுகள் தமிழ்ச் சமூக விழிப்புணர்வுக்கு ஆற்றிய பங்களிப்பினை எழுதுக.

20. அண்ணாவின் கட்டுரைகள் வழி உணரலாகும் சீர்திருத்த கருத்துக்களை விவரிக்க.

———————

| S–2610 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1S1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024.**

**First Semester**

**Tamil**

**பேச்சுக்கலைத் திறன்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                Maximum : 75 Marks

**பகுதி அ**                $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க

1. பேச்சுக் கலை குறித்து திரு.வி.க. கூறிய கருத்தினை எழுதுக.

2. 'அரங்கின்றி வட்டாடுதல் போன்றது' எதற்காக? யாரால் சொல்லப்பட்டது?

3. விடுதலைப் போராட்ட காலத்தில் மேடைப் பேச்சில் சிறந்து விளங்கியவர்கள் இருவர் பெயரைக் குறிப்பிடுக.

4. நகைச்சுவைப் பேச்சில் மக்களைக் கவர்ந்த நடிகர்கள் இருவர் குறித்து எழுதுக.

5. சொற்பொழிவுக்கு உரிய திறன்கள் ஒன்றிரண்டைக் கூறுக.

6. மேடைப் பேச்சால் சிறப்புற்றோர் எடுத்துரைத்த நயமான சொற்றொடர்களை எழுதுக.

7. புகழ்பெற்ற சொற்பொழிவாளர்களுள் இருவருரைக் குறிப்பிடுக.

8. பேச்சாளர்கள் பயன்படுத்துகின்ற உத்திகளில் சிலவற்றை எழுதுக.

9. பக்திச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு உரிய செய்திகளை தொகுக்கும் முறைகள் ஒன்றிரண்டை மட்டும் எடுத்துரைக்க.

10. பேச்சைத் தொடங்கும் முன் பேச்சாளர்கள் கடைப்பிடிக்கும் சில செயல்முறைகளைக் கூறுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பேச்சாளருக்கு மொழி அறிவு செப்பமாக அமைய வேண்டிய தேவை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பேச்சாளருக்குரிய தகுதிகளாகச் சொல்லப்படுவனவற்றை விளக்குக.

12. (அ) சமயச் சொற்பொழிவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நகைச்சுவை கலந்து பேசக் கூடிய பேச்சாளர்கள் குறித்து எழுதுக.

13. (அ) சொற்பொழிவுத் தொனி எவ்வாறு அமைதல் சிறப்புடையது? கூறுக.

(அல்லது)

(ஆ) பேச வேண்டிய கருத்தை பேச்சாளர்கள் வெளிப்படுத்தும் முறையினை விளக்குக.

14. (அ) கி.வா. ஜகந்நாதனின் பேச்சில் புலப்படும் சிலேடை நயத்தைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மேலைநாட்டுப் மொழிஞர்கள் சிலரை அறிமுகம் செய்க.

15. (அ) பள்ளி மாணவர்களுக்கு உரிய சொற்பொழிவுக்கான முன் முயற்சிகளையும் தயாரிப்பினையும் உரைக்க.

(அல்லது)

(ஆ) பார்வையாளர்களையும் கேட்போரையும் கவரப் பயன்படுத்தும் உத்திமுறைகள் சிலவற்றை எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

**எவையேனும்** மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. சொற்பொழிவு ஓர் அறிய கலை என்பதனை அறிஞர்களின் விளக்கம் கொண்டு எழுதுக.

17. இன்றைய ஊடகத்தில் நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவுகளைத் தொகுத்துத் தருக.

18. அவையறிந்து பேசுதல் குறித்து கட்டுரை ஒன்று தருக.

19. அறிஞர் அண்ணாவின் பேச்சுக் கலை குறித்து விவரிக்க.

20. சொற்பொழிவால் ஏற்படுகின்ற நன்மை தீமைகளைப் பட்டியலிடுக.

---

| S–2611 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1FC |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**First Semester**

**Tamil**

**தமிழில் சிறார் இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து விளாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க

1. சிறுவர்களுக்காக இலக்கியம் படைப்பதால் உண்டாகும் நன்மைகள் சிலவற்றை கூறுக.

2. சிறுவர் இலக்கியத்தை வாய்மொழியாக முதன்முதலில் உண்டாக்கியவர்கள் யாவர்?

3. நிலவைக் காட்டிக் குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும் நிகழ்ச்சிக்கு முன்னோடியாக அமைந்த சங்க இலக்கியச் சான்று ஒன்று தருக.

4. அழ. வள்ளியப்பா பாடியுள்ள சிறுவர் பாடல் ஒன்றைக் குறிப்பிடுக.

5. சிறார் இலக்கியப் படைப்புகள் சிலவற்றை எழுதுக.

6. ஔவையார் இயற்றிய சிறுவர் படைப்புகள் இரண்டைக் கூறுக.

7. ஆயிஷா நடராசன் எழுதிய சிறு கதை நூலின் தலைப்பினை எழுதுக.

8. சிறுவர்களுக்குப் பிடித்த விலங்கு, பறவை இவற்றின் சிலவற்றை எடுத்துரைக்க.

9. ‘சிறுவர்களையும் கதைகளையும் பிரிக்கவே முடியாது’ இதனைச் சொன்னவர் யார்?

10. சிறுவர்களுக்கான பழைய சிறகதைகளை எப்பெயரிட்டு அழைத்தனர்?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க

11. (அ) சிறார் இலக்கியம் குறித்த அறிஞர்களின் விளக்கத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கை வரலாற்றினை சிறுவர்களுக்கு எவ்வாறு எளிமையாக எடுத்துரைப்பது?

12. (அ) வாண்டு மாமா எழுதியுள்ள சிறுவர் இலக்கியப் படைப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) குழ. கதிரேசனின் சிறார் இலக்கியம் குறித்து எழுதுக.

13. (அ) சிறார் இலக்கியங்கள் எந்தெந்த நோக்கங்களைக் கொண்டிருக்கின்றன?

(அல்லது)

(ஆ) எளிய நடை, ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட சிறுவர் இலக்கியம் ஒன்றை அறிமுகம் செய்க.

14. (அ) சிறார் கவிதைகளில் பூவண்ணன் எவ்வாறு வெற்றி பெற்றுள்ளார்? கூறுக.

(அல்லது)

(ஆ) ஆழ்கடல் உயிரினங்களை நாராயணி சுப்ரமணியன் எங்ஙனம் எடுத்தியம்பியுள்ளார்?

15. (அ) பெரிய சாமித் தூரனின் நாடக இலக்கிய உள்ளடக்கம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆலிஸின் அற்புத உலகம் குறித்து எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டரை வடிவில் விடையளிக்க

16. அறிவியல் சார்ந்த சிறார் படைப்புகள் குறித்து எழுதுக.

17. ஆயிஷா நடராசன் சிறுவர் இலக்கியப் படைப்புகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைப் கூறுக.

18. சிறார் இலக்கியப் படைப்புகளின் உருவமும் உள்ளடக்கமும் எவ்வாறமைகின்றன? விளக்குக.

19. பூவண்ணன் கவிதைகளில் வெளிப்படும் கருத்துக்களை விவரிக்க.

20. பொன்னியின் தியாகம் நாடகக் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

———————

| S–2612 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பெரும்பொருளுடையோர் என்ன செய்ய வேண்டும்?

2. 'கற்றது உடைமை காட்சியின் அறிப' – முதுமொழியை விளக்குக.

3. கொடுங்கோல் மன்னனின் ஆட்சி எதனைத் தரும்?

4. காலை எழுந்தவுடன் செய்ய வேண்டியன எவை?

5. சிறுபஞ்சமூலம் கூறும் மருந்துப் பொருட்கள் எவை?

6. மேன்மையாளர் செய்யும் தொழில்கள் எவை?

7. நீரில் ஆம்பலின் அளவை எதனுடன் ஒப்பிடப்படுகிறது?

8. கல்விக்கு அழகு எது?

9. பழகுதல் குறித்து உலகநாதர் கூறுவது என்ன?

10. ஒழுக்கத்தால் உயர்ந்தோர் செயல் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) இளமை நிலையாமை குறித்த கருத்துகளை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பழமொழி நானூற்றில் நுவலப்படும் பழமொழிகளை எழுதுக.

12. (அ) துன்பம் தரும் செயல்களாக இன்னாநாற்பது குறிப்பிடுவதை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆசாரக்கோவை எச்சிலுடன் செய்யத்தகாதென பற்றிக் கூறுவனவற்றை விளக்குக.

13. (அ) திரிகடுகம் உணர்த்தும் விழுமியங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறுபஞ்சமூலம் உரைக்கும் அறக்கருத்துகளை எடுத்துரைக்க.

14. (அ) நட்பு குறித்த கருத்தை மூதுரைவழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஔவை தாம் ஈட்டிய பொருளைப் பிறருக்கு வழங்க வேண்டுமென்ற கருத்தை எங்ஙனம் வலியுறுத்துகிறார்?

15. (அ) உலகநீதி வேண்டாத செயல்களின் போதனைகளாகக் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறம் உரைத்தல், கேட்டல் முதலியோர் இயல்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. பழமொழி நானூற்றில் குறிப்பிடப்படும் பழமொழி குறித்துத் திறனாய்க.

17. வாழ்வியல் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகளைக் குறித்து விவரிக்க.

18. நும்பாடப் பகுதியில் அமைந்துள்ள திரிகடுகச் செய்திகளை விரித்துரைக்க.

19. அதிவீரராமபாண்டியன் உணர்த்தும் அறங்களை விவரிக்க.

20. முனைப்பாடியாரின் நூல்வழி பெறப்படும் அறக்கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

| S–2613 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

தமிழ்

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. செவ்வியல் தமிழ் நூல்களின் எண்ணிக்கை எத்தனை? ஏதேனும் இரு நூல்களைத் தருக.

2. இரட்டைக் காப்பியங்கள் எவை?

3. ஐம்பெருங்காப்பியங்களில் சமணக் காப்பியத்தை எழுதுக.

4. முதலாழ்வார்கள் மூவர் யார்?

5. வைணவ உரைகளை எவ்வாறு வகைப்படுத்துவர்?

6. தூதின் இலக்கணம் யாது?

7. தாயுமானவர் இயற்றிய பாடல்கள் எவை?

8. முதன்முதலாக வந்த உரைநடை நூலினை எழுதுக.

9. தன்வரலாறு நூல்கள் இரண்டினை எழுதுக.

10. தமிழில் முதல் நாடக நூல் எது? அதனை இயற்றியவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) திருக்குறள், நாலடியார் ஒப்பிட்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தின் சிறப்புகள் யாவை? விளக்குக.

12. (அ) ஆண்டாளின் பக்தி நெறியை விளக்குக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணச் சிறப்பை எழுதுக.

13. (அ) தொல்காப்பிய உரையாசிரியர்கள் இருவரின் உரை பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சதக இலக்கியம் குறித்து விவரிக்க.

14. (அ) ஆறுமுக நாவலரின் உரைநடைச் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபின் தமிழ்ப்பணிகளை எழுதுக.

15. (அ) நீவிர் அறிந்த தன்வரலாற்று நூலினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திராவிட இயக்க நாடகம் ஒன்றினை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. ஆற்றுப்படை நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. வைணவ சமயக் கோட்பாட்டை ஆழ்வார்களின் பக்திநெறி வழி விவரிக்க.

18. வைணவ உரைகளின் அமைப்பு குறித்துக் கட்டுரைக்க.

19. தமிழ் உரைநடையை வளர்த்த அறிஞர்கள் குறித்துக் கட்டுரைக்க.

20. புதுக்கவிதையின் வடிவம் வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

———————

| S–2614 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA3 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

தமிழ்

இயைபுப்பாடம் – கலைஞரின் தமிழ்ப்பணியும், சமூகப்பணியும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

பகுதி அ  $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. மு.கருணாநிதி – குறிப்பு வரைக.

2. மு.கருணாநிதியின் தமிழ்ப்பணிகள் குறித்து எழுதுக.

3. மு.கருணாநிதி படைத்த படைப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. கட்சிக்காரன் எனும் கட்டுரையின் மையக்கரு யாது?

5. சங்கிலிசாமியார் எனும் சிறுகதையின் கதைக்களம் எது?

6. பொன்னர் சங்கர், நாவலின் தனிச்சிறப்பு யாது?

7. கல்லக்குடி போராட்டம் ஏற்படக் காரணம் என்ன?

8. மொழிப் போராட்டத்தில் உயிர் நீத்தம் போராளிகள் இருவரைக் கூறுக.

9. தரமணி டைடல் பார்க் தகவல் தொழில் நுட்பம் பூங்காவின் தனித்தன்மைகள் என்ன?

10. குடிசை மாற்று வாரியம் – குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) கலைஞரின் இளமைப் பருவம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கலைஞர் தொடங்கிய இளைஞர் அமைப்பு குறித்து எழுதுக.

12. (அ) மந்திரி குமாரி நாடகம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்கிலிச்சாமியார் சிறுகதையின் சமுதாயக் கருத்துக்களைக் குறிப்பிடுக.

13. (அ) தெற்கிலிருந்து ஒரு சூரியன் என்ற கட்டுரையின் சிறப்புகளைத் தருக.

(அல்லது)

(ஆ) கலைஞராக இருப்பதன் முக்கியத்துவம் குறித்து இந்து என்ராம் கூறுவனவற்றை விளக்கியுரைக்க.

14. (அ) கலைஞர் அவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டக் கவிதையின் பாடுபொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்லக்குடி போராட்டம் குறிப்பு வரைக.

15. (அ) கலைஞரின் தொழிநுட்ப வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊரக வளர்ச்சித் திட்டங்களும் அவற்றின் பயன்களும் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளி.

16. கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் சமூக வாழ்வியலைத் தொகுத்துரைக்க.

17. பொன்னர்-சங்கர் நாவலின் பாத்திரப் பண்புகளை எடுத்துரைக்க.

18. மந்திரி குமாரி நாடகத்தின் கட்டமைப்பினைத் திறனாய்க.

19. கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சமூக நீதிப் போராட்டங்களை பட்டியலிடுக.

20. கலைஞரின் சமூக நலத்துறைத் திட்டங்களைத் தொகுத்துரைக்க.

———————

| S–2615 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA4 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

தமிழ்

இயைபுப்பாடம் – சுவடியியல்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. சுவடி– விளக்கம் தருக.

2. சுவடி தயாரிப்பு முறைகள் யாவை?

3. சுவடிப்பதிவு செய்யும் தன்மைகள் யாவை?

4. சுவடி விளக்க அட்டவணை - விளக்கம் தருக.

5. சுவடி அமைப்பு முறைகள் என்றால் என்ன?

6. சுவடிகளை நூலாக்கும் முறைகள் யாவை?

7. சுவடிக்காப்பில் கல்வி நிறுவனங்களின் பங்கு குறித்து எழுதுக.

8. சுவடிக்காப்பில் அரசு நிறுவனங்களின் தன்மைகள் யாவை?

9. சுவடிகளைப் பாதுகாக்கும் முறைகள் எவை?

10. சுவடிகளைப் பழுது நீக்கும் முறைகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) சுவடிகளின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவடி இலக்கியத் தொகுப்புகள் பற்றி எழுதுக.

12. (அ) சுவடிகளைப் பதிப்பித்தல் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சுவடிகளில் எழுதப்பட்டுள்ள முறைகளை விளக்குக.

13. (அ) சுவடி அமைப்பு முறைகளைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) சுவடியில் குறியீட்டுமுறை பற்றி விளக்குக.

14. (அ) சுவடிக்காப்பகங்கள் பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சுவடி பாதுகாப்பில் பொது நிறுவனங்களின் பங்களிப்பு குறித்து விளக்குக.

15. (அ) சுவடிகள் பாதுகாப்பில் பண்டைய முறைகளின் தன்மைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சுவடி ஆப்ஸ்களின் பயன்பாடுகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளி.

16. சுவடிகளின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரி.

17. சுவடி சேகரிப்புப் பணிகள் குறித்துத் திறனாய்க.

18. சுவடிப்பதிப்பு நிறுவனங்களில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க.

19. சுவடிகளை நூலாக்குதல் குறித்துக் கட்டுரை வரைக.

20. சுவடிகளைப் பாதுகாத்தலின் பண்டைய முறைகளைத் திறனாய்க.

---

| S–2616 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA5 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

தமிழ்

இயைபுப்பாடம் – நாடகவியல்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல் / தொடரில் விடையளிக்க.

1. நாடகம் சொற்பொருள் விளக்கம் தருக.

2. ஆங்கில அரசால் தடைவிதிக்கப்பட்ட நாடகங்களைக் குறிப்பிடுக.

3. மனோன்மணியம் நாடகத்தை இயற்றியவர் யார்? எந்நூலின் தழுவல்?

4. பம்மல் சம்பந்த முதலியார் பெற்ற விருதுகள் யாவை?

5. வள்ளிக்கூத்து என்றால் என்ன ?

6. பண்டைய நாடக நூல்களை வரிசைப்படுத்துக.

7. பொதுவியல் என்றால் என்ன?

8. சமூக நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. நாடகப் பயிற்சிக்கு முன் செய்ய வேண்டுவன யாவை ?

10. நாடகம் நடிப்பவர்க்குரிய தகுதிகள் இரண்டினை எழுதுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் நாடகக் குறிப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் கால நாடகக் கலையை எடுத்துரைக்க.

12. (அ) பம்மல் சம்பந்தனார் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப்பணி குறித்து எழுதுக.

13. (அ) எழினியின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் எடுத்துரைக்கும் கூத்து வகைகளை எழுதுக.

14. (அ) ஓரங்க நாடகத்தின் இயல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்கால தொலைக்காட்சி நாடகம் குறித்த உமது கருத்தைத் தருக.

15. (அ) நாடக ஆசிரியராக உருவாகுவதற்குரிய அடிப்படைத் தகுதிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடகப் பயிற்சியினை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இருபதாம் நூற்றாண்டில் காணப்படும் நாடகங்களின் நோக்கும் போக்கும் குறித்து தொகுத்தெழுதுக.

17. தமிழ் நாடக வரலாற்றில் அறியப்படும் நாடக ஆசிரியர்கள் ஆற்றிய தொண்டினைப் புலப்படுத்துக.

18. நாடகத்தின் அமைப்பினையும் வளர்ச்சி நிலையினையும் விரிவாக விளக்குக.

19. நாடக வகைகயில் தெருக்கூத்து பெறும் இடத்தினை ஆய்க.

20. சமூக விழிப்புணர்வு மிக்க நாடகத்தினை நாடக வடிவில் தொகுத்து வரைக.

| S–2617 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2S1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

**தமிழ்**

**ஊடகவியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல்/ தொடரில் விடையளிக்க.

1. Communication என்பதன் தமிழாக்கம் யாது?

2. தொடக்ககால மனிதனின் முதல் தகவல் தொடர்பு சாதனம் குறித்து எழுது.

3. அச்சு ஊடகத்தைக் கண்டறிந்தவர் யார்?

4. பொது ஊடகம் என்றால் என்ன?

5. உலகத் தொலைக்காட்சி தினம் எது?

6. உலகத் தொலைக்காட்சி நிலையங்களைக் குறிப்பிடுக.

7. தமிழ் திரைப்பட இதழ்கள் இரண்டினைக் கூறுக.

8. ஆவணத்திரைப்படம் என்றால் என்ன?

9. கலைஞரின் வசனங்களால் வெற்றிப் பெற்ற இரண்டு திரைப்படங்களை எழுதுக.

10. தமிழ் இணையத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஊடகத்தின் மூலம் மக்கள் பெறும் பயன்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஊடக வகைகளைப் பட்டியலிட்டு விளக்குக.

12. (அ) அச்சு ஊடகம் என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தற்காலத் தமிழ் வார இதழ்களை மதிப்பிடுக.

13. (அ) வானொலி செய்தியாளருக்கான அடிப்படைத் தகுதிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சித் தொடர்களின் இன்றைய நிலைக் குறித்து எழுதுக.

14. (அ) திரைப்படம் முக்கியத்துவம் பெறுவதற்கானக் காரணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கலைத் திரைப்படம் என்றால் என்ன? விளக்குக.

15. (அ) கதை – திரைக்கதை – கதைக்கரு : வேறுபாடு தருக.

(அல்லது)

(ஆ) சமூக வலைதளங்களின் நன்மைகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பண்டைய காலத்திலிருந்து தகவல் தொடர்பு ஊடகம் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை விவரி.

17. வானொலியில் இடம் பெறும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை விரிவாக எடுத்துரைக்க.

18. தகவல் தொடர்வு ஊடகத்தில் தொலைக்காட்சியின் பங்களிப்பு குறித்தும் அதன் நன்மை, தீமை குறித்தும் ஆராய்க.

19. திரைப்படத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை ஒன்றை வரைக.

20. தமிழ் இணைய இதழ்களின் வரலாற்றினை விவரி.

————————

**S–2618**

**Sub. Code**
**23BTA2S2**

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2024

### Second Semester

தமிழ்

அறிவியல் தமிழ்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் இருவரைக் கூறுக.

2. எவையேனும் இரண்டு மின்னறிவியல் நூலின் பெயரைக் கூறுக.

3. விவேக சிந்தாமணி எனும் அறிவியல் வெளி வந்த ஆண்டு என்ன? அதன் ஆசிரியர் யார்?

4. சிறுவர்களுக்கான 'அறிவியல் தமிழ்' இதழின் பெயரைக் கூறுக.

5. தமிழில் அறிவியல் களஞ்சியம் வெளியிட்ட பல்கலைக் கழகம் எது?

6. அறிவியல் அகராதி எனும் நூலின் ஆசிரியர் யார்?

7. எவையேனும் இரண்டு மின்னிதழ்களின் பெயர்களைக் கூறுக.

8. 'ஒளி நாடாக்கள்' பொருள் தருக.

9. அறிவியல் இயக்க உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் இதழின் பெயர் என்ன?

10. பெண்களுக்காக வெளிவரும் இதழின் பெயர் என்ன? சான்று தருக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) பொறியியல் துறை அறிவியல் தமிழ் நூல்கள் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) மின்னணுவியல் தமிழ் நூல்கள் இன்றைய நிலை குறித்து விளக்குக.

12. (அ) சிறுவர்களுக்கான மாத இதழ்கள் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) காலைக்கதிர் குறிப்பு வரைக.

13. (அ) எவையேனும் பத்து அறிவியல் கலைச் சொற்களை எழுதி பொருள் கூறுக.

(அல்லது)

(ஆ) அறிவியல் அகராதிகள் மொழி வளர்ச்சியில் வகிக்கும் பங்கினை விவரிக்க.

14. (அ) தமிழ்த்திணை குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) குறுந்தகடுகள் வழி அறிவியல் தமிழ் வளர்ச்சியினைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) சுதேசி அறிவியல் இயக்கம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் அறிவியல் மன்றங்களின் பெயர்களையும் பணிகளையும் விளக்கியுரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு விடையளி.

16. அறிவியல் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரைக்க.

17. சிறுவர் இதழ்களில் அறிவியல் செய்திகள் எனும் பொருண்மைபால் கட்டுரை வரைக.

18. அறிவியல் அகராதிகள் எங்ஙனம் மொழிவளர்ச்சிக்கு உதவுகின்றன என்பதைச் சான்றுடன் நிறுவுக.

19. மொழி வளர்ச்சியில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கினை விவரி.

20. தமிழ்நாடு தமிழக அறிவியல் பேரவையின் தமிழியற் பணிகளைத் தொகுத்துரைக்க.

———————